குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 32/2020

அ.சா. 1

2023–ம் ஆண்டு நவம்பர் 21–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 1 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அண்ணாமலை | ஜாதி | |
| தந்தை பெயர் | செல்வம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 3.51 மணி,

Accused Murugan Present. Advocate Mr.Arunachalam present for accused. APP is Mr.M.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது பூசாரிபட்டியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் காயமடைந்த இறந்து போன மாதம்மாள் எனது மனைவி. தேதி நினைவில் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு காலை 5.45 மணியளவில் எனது மனைவி இயற்கை உபாதைக்காக பூசாரிப்பட்டி அருகே சேலம் டூ தர்மபுரி செல்லும் சாலையில் கடக்க இருந்த போது தர்மபுரி நோக்கி வந்த இருசக்கர வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2. எனது மகன் செல்வராஜ் எனக்கு விபத்து குறித்து தகவல் சொன்னார். நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது எனது மனைவி தலை, கை , மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டு இருந்தது. அவரை ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனை அழைத்துச் சென்றேன். அப்போது மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீஸார் வந்தார்கள். என் மனைவி பேச முடியாத நிலையில் இருந்ததால் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். அதில் கைரேகை வைத்துள்ளேன். **(என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அது அ.சா.ஆ.1**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. )

3. என் மனைவி சுமார் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்பு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனது மனைவி மீது மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி தான் அந்த இருசக்கர வாகனத்தை விபத்தின் போது ஓட்டிவந்தார் என்று தெரிந்து கொண்டேன். போலீஸார் என்னை விசார்த்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

4. விபத்து குறித்து எனக்கு தகவல் கிடைத்த போது நான் ஏற்காடில் இருந்தேன். தகவல் கேள்வி பட்ட உடனே எனது மகனிடம் எனது மனைவியை மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தினேன். பின்பு நான் ஏற்காட்டில் இருந்து நேரடியாக மருத்துவமனைக்கு வந்துவிட்டேன் என்றால் சரி. எனது மனைவி இறக்கும் போது நான் மருத்துவமனையில் தான் இருந்தேன் என்றால் சரி.

5. நான் சம்பவத்தை நேரிடையாக பார்த்தேனா என்றால் தகவல் கேள்வி பட்டு வந்தேன். சம்பவம் நடந்த அன்று நான் மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் சரி. மருத்துவமனையில் எனது மனைவியை அனுமதித்த அன்றே காலை 10.00 மணியளவில் போலீஸார் வந்து விட்டார்கள். போலீஸார் கூறி தான் வாகனத்தின் பதிவெண் மற்றும் எதிரியை தெரியும் என்றால் சரிதான்.

6. புகாரில் உள்ள சங்கதிகளை போலீஸார் தான் எழுதினார் என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. சம்பவ இடத்தை நான் சம்பத்திற்கு மறுநாள் காலை சென்று பார்த்தேன். சேலம் டூ தர்மபுரி செல்லும் மெயின் ரோட்டில் கிழக்கு புரம் சம்பவம் நடந்தது என்றால் திசை எனக்கு தெரியவில்லை.

7. மருத்துவமனையில் வைத்து போலீஸார் என்னை விசார்த்த பின்பு மறுபடியும் என்னை விசாரிக்கவில்லை என்றால் இரண்டு மூன்று முறை விசாரித்தார்கள் அதன் பின்பு விசாரிக்க வில்லை. விபத்து ஏற்படுத்தி வாகனத்தின் ஓட்டுநர் இருந்தாரா அல்லது ஓடிச் சென்றுவிட்டாரா என்றால் அங்கே தான் இருந்தார். சாட்சி தற்போது யார் இடித்தார் என்று தெரியாது என மாற்றி கூறுகிறார்.

8. எனது மகன் செல்வராஜீக்கு விபத்து குறித்து நான் தான் தகவல் கூறினேன் என்றால் சாட்சி ஆமாம் என்று தலை அசைத்துவிட்டு தற்போது எனது மகன் தான் எனக்கு தகவல் கூறினான் என கூறுகிறார். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**.இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 4.15 .மணி,

ஒம்/—ச.ஷர்மிளா,.

குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்